District Munsif Court, Palani.
O.S.No.108/2018

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.வ.எண்.108/2018

--------

அனந்தகிருஷ்ணன் .. வாதி

/எதிர்/

1.சின்னத்துரை,
2.பழனிச்சாமி,
3.குமார்,
4.ஜெகதீஸ். .. பிரதிவாதிகள்

(2 முதல் 4 பிரதிவாதிகள் இ.ம.எண்.1/2019 ல் கடந்த 24.06.2022 ம் தேதிய உத்தரவின்படி தரப்பினர்களாக சேர்க்க அனுமதிக்கப்பட்டு, இ.ம.எண்.4/2023 ல் கடந்த 05.01.2023 ம் தேதிய உத்தரவின்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் ஆர்.மாரப்பன் மற்றும் என்.திருமூர்த்தி ஆகியோர் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பி.மகேந்திரன் மற்றும் பி.மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு வாதி தரப்பில் தனிப்பட்ட அறிவிப்பு அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பில் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட அறிவிப்பு அனுப்பாததாலும், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

District Munsif Court, Palani.
O.S.No.108/2018

<u>தீர்ப்புரை</u>

பிரதிவாதிகள் வசம் உள்ள தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகளை வாதியிடம் ஒப்படைக்கும்படி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கும்படி கோரியும், தாவா செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு வாதி தரப்பில் தனிப்பட்ட அறிவிப்பு அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பில் 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட அறிவிப்பு அனுப்பவில்லை. வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. வாதி அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. எனவே, இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 17.07.2023 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.07.17 17:31:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.